
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 4 | 4 Pages | 31.7.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 4 | 4 பக்கங்கள் | 31.7.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

## கள்ளக்காதலை கைவிட மறுத்த கணவர்... இளம்பெண் எடுத்த விபரீத முடிவு



பெங்களூர், ஜூலை 31

கர்நாடக மாநிலம் பெங்களூரு பேடரஹள்ளி அருகே ஆந்திரஹள்ளி பகுதியில் வசித்து வருபவர் திலீப் (வயது 30). இவரது மனைவி மானசா (25). இந்த தம்பதிக்கு கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்று இருந்தது. இவர்களுக்கு 5 வயதில் மகள் இருக்கிறாள். திருமணத்தின்போது திலீப்பிற்கு வரதட்சணை கொடுக்கப்பட்டது. எனினும் கூடுதல் வரதட்சணை கேட்டு மானசாவை அவர் கொடுமைப்படுத்தி உள்ளார். மேலும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக வேறு பெண்ணுடன் திலீப் கள்ளத்தொடர்பில் இருந்துள்ளார். இது மனைவி மானசாவுக்கு தெரியவந்தது.

உடனே இதுபற்றி திலீப்பிடம் அவர் கேட்டதுடன், கள்ளக்காதலை கைவிட வலியுறுத்தியுள்ளார். ஆனால் திலீப் கள்ளக்காதலை கைவிட மறுத்துள்ளார். இது தொடர்பாக தம்பதி இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் மானசாவும் கோபித்து கொண்டு தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார். அவரை குடும்பத்தினர் சமாதானப்படுத்தி கணவருடன் சேர்ந்து வாழ அனுப்பி வைத்தனர். இதையடுத்து திலீப்புடன் மானசா மீண்டும் சேர்ந்து வாழ தொடங்கினார்.

இந்த நிலையில் நேற்று கள்ளக்காதல் விவகாரம் தொடர்பாக தம்பதி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரம் அடைந்த மானசா, வீட்டின் ஒரு அறைக்கு சென்று தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் தான் மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்வதை செல்போன் மூலம் சமூக வலைதள பக்கத்தில் நேரலையில் வெளியிட்டார்.

இதனை பார்த்த கணவர் குடும்பத்தினர் பேடரஹள்ளி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். உடனே தகவலின்பேரில் வந்த போலீசார் விரைந்து வந்தனர். அதற்குள் அவர் தூக்குப்போட்டு உயிரை மாய்த்து கொண்டார். இதையடுத்து மானசா உடலை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்கு கொண்டு சென்றனர்.

இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கள்ளக்காதலை கைவிட கணவர் மறுத்ததால் இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## ராபிடோவில் பயணம் செய்த இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை

பெங்களூரு, ஜூலை 31

கர்நாடக மாநிலம் பெங்களூரு புறநகர் நெலமங்களா டவுன் பாகலகுண்டே போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இளம்பெண் ஒருவர் வசித்து வருகிறார். இவர் வேலைக்கு செல்வதற்கு புறப்பட்டார். அப்போது ராபிடோ பைக் டாக்சி ஒன்றை முன்பதிவு செய்தார். அதன்படி வாலிபர் ஒருவர் ராபிடோ பைக் டாக்சியில் வந்தார்.

அவர் இளம்பெண்ணை மோட்டார் சைக்கிளில் டிராப் செய்வதாக அழைத்து கொண்டு சென்றார். அப்போது சாலையில் ஆள்நடமாட்டம் இல்லாத பகுதியில் வைத்து, இளம்பெண்ணுக்கு, வாலிபர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதைக்கண்டு அந்த பெண் அதிர்ச்சி அடைந்தார். உடனே அவர் இதனை கண்டித்துள்ளார். எனினும் வாலிபர் தொடர்ந்து அந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இதையடுத்து அந்த பெண் பைக் டாச்சியை நிறுத்தி உள்ளார். பின்னர் டிரைவருடன், அவர் வாக்குவாதம் செய்தார். இதையடுத்து வாலிபர் அங்கிருந்து தப்பிக்க முயன்றார். அப்போது அந்த வழியாக வந்த ஒய்சாலா போலீசார் வாலிபரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தனர். விசாரணையில் அவர் பைக் டாக்சி டிரைவர் என்பதும், இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுக்க முயன்றதும் தெரியவந்தது. இதையடுத்து வாலிபரை போலீசார் கைது செய்தனர். விசாரணையில் வாலிபர் ஜெய்ப்பூரை சேர்ந்த மகேஷ் என்பது தெரிந்தது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## மத்தியபிரதேசம்: ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்த சிறுமி உயிரிழப்பு



போபால், ஜூலை 31

மத்திய பிரதேச மாநிலம் சிங்ராலி மாவட்டத்தை சேர்ந்தவர் பிந்து சாகு. இவரது 3 வயது மகள், வயலில் விளையாடிக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாகஅங்குமூடப்படாமல்இருந்தஆழ்துளைகிணற்றுக்குள் விழுந்தாள்.

இந்த சம்பவம் குறித்து உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் விரைந்து வந்த போலீசார் மற்றும் தீயணைப்பு படையினர், சிறுமியை விரைவாக மீட்கும் பணியில் ஈடுபட்டனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். மேலும், இதுகுறித்து அறிந்த உள்ளூவாசிகளும் அங்கு திரண்டனர்.

சுமார் 250 அடி ஆழ கிணற்றில், சிறுமி 25 அடி ஆழத்தில் கொண்டதாக கூறப்படுகிறது. உடனடியாக சிறுமியை மீட்கும் நடவடிக்கையில் இறங்கிய மீட்புப் படையினர், ஐந்தரை மணி நேர முயற்சிக்கு பிறகு சிறுமியை வெளியே கொண்டு வந்தனர். உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிறுமி கொண்டுசெல்லப்பட்டார். ஆனால் சிறுமி ஏற்கெனவே உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மீனவ குடும்பங்களுக்கான உதவித்தொகையை உயர்வு: முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜூலை 31

இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினை 26.07.2024 அன்று தலைமைச்செயலகத்தில், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின்போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை எடுத்துரைத்தும், தங்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்து நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, மீனவ சங்கப்பிரதிநிகள் பாம்பன் தூக்குப்பாலம் அருகே கால்வாய் தூர்வாரவேண்டும் என்று தமிழ்நாடு முதல்அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். மேலும், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர்களையும், கைப்பற்றப்பட்டுள்ள 175 படகுகளையும் மீட்டுத்தர தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதல்அமைச்சரை மீனவ சங்க பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.



மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறையில் இருக்கும் மீனவ குடும்பங்களுக்குதினஉதவிதொகையாக தற்போது நாளொன்றுக்கு 250 ரூபாய் வழங்கப்பட்டு வரும்நிலையில், அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திட தின உதவித் தொகையினை நாளொன்றுக்கு 350 ரூபாயாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, முதல்அமைச்சர் கடந்த 2022 மற்றும் 2023ம் ஆண்டுகளில் இரு தவணைகளில் 151 படகுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரண உதவி வழங்க ஆணையிட்டார்கள்.

அதனடிப்படையில் முதல்அமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து விசைப்படகுகளுக்கு தலா 5 லட்சம் ரூபாய் மற்றும் நாட்டுப்படகுகளுக்கு தலா 1.5 லட்சம் ரூபாய் என மொத்தம் 6.74 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

இந்தநிலையில் தற்போது, இலங்கை கடற்படையினரால் 2018 முதல் 2023ம் ஆண்டுவரை கைப்பற்றப்பட்டு அங்கு நெடுங்காலமாக உள்ள 127 மீட்க இயலாத படகுகளுக்கு கடந்த ஆண்டுகளில் வழங்கிய நிவாரணதொகையினை விசைப்படகுகளுக்கு ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தியும், நாட்டுப்படகுகளுக்கு வழங்கப்பட்டு வந்த1.5 லட்ச ரூபாயை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதல்அமைச்சர் ஆணையிட்டுள்ளார். இதனால் மீனவர்கள் ரூ.6.82 கோடி அளவிற்கு பயனடைவார்கள்.

மேலும் பாம்பன் தூக்குப்பாலம் அருகே தூர்வாரும் கோரிக்கையினை ஏற்று தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அதன் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முதல்அமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர்களையும், கைப்பற்றப்பட்டுள்ள 175 படகுகளை நேரடியான நிலையான தூதரக நடவடிக்கை மூலமாக மீட்டுத்தரவும், கைப்பற்றப்பட்டுள்ள படகுகளை ஆய்வுசெய்ய குழுவினரை அனுமதிக்கவும், இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை, மீனவச் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவும், கூட்டுப் பணிக் குழு கூட்டத்தினை நடத்திடவும் முதல்அமைச்சர், இந்தியப் பிரதமரையும், மத்திய வெளியுறவுத்துறை மந்திரியையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

எனவே, இந்த சூழ்நிலையின் தீவிரத்தன்மையை கருத்தில்கொண்டு, நாடாளுமன்றத்தில் இப்பொருள் குறித்து பேசிடவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு, விரைவில் மத்திய வெளியுறவுத்துறை மந்திரியை நேரில் சந்தித்தும் இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்துமாறு தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

மீனவர்களுடான சந்திப்பின் போது, எஸ். ரகுபதி. சட்டத்துறை அமைச்சர், அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், மீன்வளம் மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாஷா முத்துராமலிங்கம், தலைமைச்செயலாளர் சிவ்தாஸ்மீனா. இ.ஆ.ப. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல்தலைமைச்செயலாளர்கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகத்தின் தலைவர் ந. கௌதமன். மீன்வளத்துறை இயக்குநர் ஆர். கஜலட்சுமி. இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சட்டம் ஒழுங்கு சீரழிவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, ஜூலை 31

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர்ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மர்ம மரணங்கள் குறித்த வழக்குகள் 90 நாட்களில் முடிக்கப்படும் என்ற வாக்குறுதி தற்போதைய முதல்அமைச்சரால் 2021ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது அளிக்கப்பட்டது. இன்று தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று கிட்டத்தட்ட 1,190 நாட்கள் முடிந்துள்ள நிலையில் மகா சீரியல் தொடர் போல நீண்டு கொண்டே செல்கிறது. பல வழக்குகளில் இந்த நிலைமைதான் நீடிக்கிறது. தி.மு.க. அரசின் இது போன்ற நடவடிக்கையும், பல்வேறு குற்றச் செயல்களில் தி.மு.க.வினரே ஈடுபடுவதும்தான் தமிழ்நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே வருவதற்கான காரணங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கடலூரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வார்டு செயலாளர் பத்மநாதன் வெட்டிக் கொலை, கன்னியாகுமரியில் காங்கிரஸ் கட்சியின் பெண் கவுன்சிலர் உஷாகுமாரியின் கணவர் ஜாக்சன் வெட்டிக் கொலை, சிவகங்கை அருகே வேலாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகி செல்வக்குமார் வெட்டி கொலை, பட்டுக்கோட்டை அருகேவிவசாயிசின்னக்குழந்தை சரமாரி வெட்டிக் கொலை, சென்னை எம்.ஜி.ஆர். நகரில் மூதாட்டி துண்டு துண்டாக வெட்டிக் கொலை. கரூர் மாவட்டம், காந்தி கிராமம், கம்பன் தெருவைச் சேர்ந்த ஜீவா வெட்டிக் கொலை, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அருகே தி.மு.க. ஒன்றியச் செயலாளர் தலைமையில் பாக்யராஜின் குடும்பத்தினர்மீது கொலைவெறித் தாக்குதல் என அன்றாடம்கொலைகள்மற்றும்கொலை வெறித் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், கோவனூர் ஊராட்சியில் சாலை போட்டதற்கான ரசீதை சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தின் உதவிப் பொறியாளரிடத்தில் ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் முருகன் கொடுத்ததாகவும், டெண்டர் விடாமல் எப்படி சாலை போடப்பட்டது என்று உதவிப் பொறியாளர் கேட்டதற்கு, ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் உதவிப் பொறியாளரை நாற்காலியை தூக்கி அடிக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. இதற்கான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன. ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிவகங்கை ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.



அரசு ஊழியர்களை மிரட்டுவது, காவல் துறையினரை மிரட்டுவது, பொதுமக்களை மிரட்டுவது என தி.மு.க.வினரே வன்முறையில் ஈடுபடுவதும், பல சமூக விரோதச் செயல்களுக்கு தி.மு.க.வினரே உடந்தையாக இருப்பதும்தான் குற்ற நிகழ்வுகள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கின்ற நிலையில், இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் முதல்அமைச்சருக்கு உண்டு. இதைப்பற்றி துளியும் கவலைப்படாமல், சட்டம்ஒழுங்கு சிறப்பாக இருப்பதாகத் தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார். முதல்அமைச்சரின் இதுபோன்ற செயல்பாட்டால் பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு சீரழிவில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடித்தால், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி குன்றி, பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும்.

எனவே, கொலைக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தரவும், காவல் துறையினரைக் கண்டு ரவுடிகள் அஞ்சும் நிலையை ஏற்படுத்தவும் முதல்அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அரசியல் பிரமுகர்கள் கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது: சசிகலா

சென்னை, ஜூலை 31

சசிகலா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"தி.மு.க. தலைமையிலான ஆட்சியில் ஒரே நாளில் 3 அரசியல் பிரமுகர்கள் வெட்டி படுகொலை செய்யப்பட்டிருப்பது மிகவும் அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது.



தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு சீரழிந்து வருவதை எனது பேட்டிகள் மற்றும் அறிக்கைகள் வாயிலாக இந்த விளம்பர அரசுக்கு தொடர்ந்து சுட்டிக்காட்டி வரும் நிலையில், அதனை மெய்பிக்கும் வகையில் தற்போது அரசியல் பிரமுகர்கள் வெட்டி படுகொலை செய்யப்படுவது நாள்தோறும் அரங்கேறுகிறது.

இவற்றையெல்லாம் தடுப்பதற்கு எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்து கொண்டு, நாள் தவறாமல் நடைபெறும் படுகொலைகளை தடுக்க தவறிய தி.மு.க. தலைமையிலான விளம்பர அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பழனி முருகன் கோவிலில் ரோப் கார் சேவை இன்று நிறுத்தம்



பழனி, ஜூலை 31

மலை மீது அமைந்துள்ள உலக புகழ்பெற்ற பழனி முருகன் கோவிலில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் பக்தர்கள் எளிதாக சென்றுவர ரோப்கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகள் பயன்பாட்டில் உள்ளது. இதில், விரைவாகவும், பழனி மலையின் இயற்கை அழகை ரசித்தபடியும் செல்லலாம் என்பதால் பெரும்பாலான பக்தர்கள் ரோப்கார் சேவையை தேர்வு செய்கின்றனர். குறிப்பாக வெளியூர், வெளிமாநில பக்தர்களுக்கு ரோப்கார் சிறந்த சுற்றுலா அனுபவத்தை கொடுக்கிறது.

இந்த ரோப்கார் நிலையத்தில் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாதந்திர, வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பழனி முருகன் கோவில் ரோப்கார் நிலையத்தில் நாளை (புதன்கிழமை) மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெறுகிறது. இதையொட்டி அன்றைய தினம் ரோப்கார் சேவை நிறுத்தப்படுகிறது. எனவே பக்தர்கள் படிப்பாதை, மின்இழுவை ரெயிலை பயன்படுத்தி மலைக்கோவில் சென்று வரலாம் என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# கருங்கலில் மருத்துவ நூல் வெளியீட்டு விழா



கருங்கல், ஜூலை 31

ஆற்றூர் மரியா ஆயுர்வேத மருத்துவ கல்லூரி துணை பேராசிரியை டாக்டர் நிசி வில்சன் எழுதிய இருமல் நோய் தீர்வுகள் 100 என்னும் மருத்துவ நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு பால்வளத் துறை அமைச்சரின் முகாம் அலுவலகத்தில் நடந்த விழாவிற்கு அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமை தாங்கி நூலை வெளியிட்டார். குமரி மேற்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் மரிய சிசுகுமார் முதல் நூலை பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில் வின்சி ஆஸ்ரம மருத்துவர் வில்சன், ரெஜிஸ், தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் செயலாளர் அலக்சாண்டர், ஜெயக்குமார், ஜெஸ்டின் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்திற்கு ஆக. 3ல் உள்ளூர் விடுமுறை

நாமக்கல், ஜூலை 31

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் ஆண்டுதோறும் ஆக. 2, 3 தேதிகளில் வல்வில் ஓரி விழா கொண்டாடப்படும். அதன்படி நிகழாண்டில் தமிழக அரசின் சார்பில் வல்வில் ஓரி விழா, சுற்றுலா விழா மற்றும் மலர் கண்காட்சி கொண்டாடப்பட உள்ளது. இதனையொட்டி, அரசின் பல்துறை பணி விளக்கக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இவ்விழாவை முன்னிட்டு, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர், அரசு அலுவலர்கள், பல்வேறு துறை பணியாளர்கள் குடும்பத்துடன் கொல்லிமலைப் பகுதிக்கு வருவர் என்பதால், வரும் ஆக. 3ஆம் தேதி (வியாழக்கிழமை) நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

இந்த உள்ளூர் விடுமுறை நாளை ஈடுசெய்யும் வகையில், ஆக. 12 ஆம் தேதி (சனிக்கிழமை) பணி நாளாக அறிவிக்கப்படுகிறது. இந்த உள்ளூர் விடுமுறை நாளன்று மாவட்ட கருவூலம், சார்நிலைக் கருவூலங்கள், அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும். இந்த விடுமுறையானது வங்கிகளுக்கு பொருந்தாது." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.4 கோடி பறிமுதல் விவகாரம்... தாம்பரம் ரெயில்வே கேண்டீன் உரிமையாளருக்கு சம்மன் அனுப்பிய சிபிசிஐடி போலீசார்



சென்னை, ஜூலை 31

பாராளுமன்ற தேர்தலின் போது தாம்பரம் ரெயில் நிலையத்தில் 4 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்வழக்கில் முதலில் கைதான 4 பேர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், நெல்லை பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரன், பாஜக நிர்வாகி எஸ்.ஆர் சேகர், நீல முரளியாதவ், தொழிலதிபர் முருகன் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்டோரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி உள்ளனர்.

இந்தநிலையில், சவுகார்பேட்டையைச் சேர்ந்த பிரபல நகைக்கடை உரிமையாளர் ஒருவர் மூலம் நான்கு கோடி ரூபாய் கைமாறியதாக கூறப்படுகிறது. தனது உதவியாளர் மூலம் பணத்தை நகைக்கடை உரிமையாளர் கொடுத்தாக கூறப்படும் நிலையில், நகைக்கடை உரிமையாளரிடம் போலீசார் முறைப்படி சம்மன் அனுப்பி விசாரணை நடத்தி உள்ளனர்.

இதனிடையே, தாம்பரம் ரெயில்வே கேண்டீன் உரிமையாளர் இன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

# பா.ஜ.க. பிரமுகர் கொலை: குற்றவாளி மீது போலீசார் துப்பாக்கி சூடு சிவகங்கையில் பரபரப்பு



சிவகங்கை, ஜூலை 31

பா.ஜ.க. கூட்டுறவு பிரிவு சிவகங்கை மாவட்டச் செயலாளராக இருந்தவர் வேலங்குளத்தைச் சேர்ந்த செல்வகுமார் (வயது 53). இவர் அதே பகுதியில் செங்கல் சூளை நடத்தி வந்தார். இவர் நேற்று முன்தினம் இரவு தனது இரு சக்கர வாகனத்தில் சிவகங்கை இளையான்குடி சாலையில் சென்றபோது மர்ம நபர்கள் வழிமறித்து வெட்டி விட்டு தப்பி சென்றனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த கொலை தொடர்பாக 5 பேரை பிடித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் விசாரணையின்போது வசந்த் என்ற நபர் போலீசாரை தாக்கிவிட்டு தப்ப முயன்றார். இதில் சார்பு ஆய்வாளர் பிரதாப் காயமடைந்தார். இதையடுத்து போலீசார் வசந்த் மீது துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்த நிலையில் படுகாயமடைந்த காவலர் மற்றும் குற்றவாளி இருவரும் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் சிவகங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சமூக ஊடகங்கள் மூலம் தனிநபர் தாக்குதலில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை சரத்குமார் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 31

பாஜக உறுப்பினரும், நடிகருமான சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சமூக ஊடகங்கள் என்பவை சமூக அவலங்களைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும். பல முக்கியத் தகவல்களை பகிர்வதாகவோ அல்லது மக்களை மகிழ்விக்கும் விதமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைத் தயார் செய்வதாகவோ அவர்களது பணி அமையலாம். ஆனால் தற்போது பலவகையிலும் சமூக ஊடகங்கள் எல்லை மீறுவதாகவே இருக்கிறது.

பிரபலங்களின் கருத்துக்களை விமர்சிப்பதற்குப் பதிலாக அவர்களைத் தனிநபர் தாக்குதலுக்கு உள்ளாக்குவது, உருவக்கேலி செய்வது, அவர்களது சொந்த தனிப்பட்ட வாழ்வைக் கிளறி அருவெறுக்கத் தக்க வகையிலான தவறான விமர்சனங்களைப் பதிவு செய்வது என்று சமூக ஊடகப் போர்வையில் சிலர் செய்யும் செயல்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

பிரபலங்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து இவர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்களில் பெரும்பாலும் உண்மை இருப்பதில்லை என்பதோடு, யாரது தனிப்பட்ட வாழ்விலும் தலையிட ஊடகங்களுக்கு உரிமை இல்லை என்பதே அடிப்படை சமூக நீதி.

அடுத்தவர் வீட்டு விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டும் நபர்கள் இதுபோன்ற போன்ற சமூக ஊடகப் பதிவுகளை ஊக்குவித்து ஆதரவளித்து வருகின்றனர்.

இப்படிப்பட்டவர்களின் மனநிலை முதலில் பரிசோதிக்கப்பட வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும், கையில் ஒரு ஊடகம் இருக்கிறது என்பதற்காக யாரை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் விமர்சனம் செய்வோம் என்று களமிறங்கி இருக்கும் நபர்கள் குற்றவாளிகளாகவே அடையாளம் காணப்பட வேண்டும்.

உயிர் உடைமைகளுக்கு சேதம் விளைவித்தால் தண்டனை உண்டு என்பது போல, தனிப்பட்ட சட்ட விதிகளில் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப மாற்றங்கள் வரவேண்டும். அரசியல் தலைவர்களும், சமூகத்தில் பொறுப்பான இடத்தில் இருப்பவர்களும் இதுபோன்ற போலியான சமூக ஊடகவாதிகளுக்கு எதிராகக் கண்டனக்குரல் எழுப்ப வேண்டும்.

இது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கான பிரச்சனையாகப் பார்க்கப்பட வேண்டும். அனைவருக்கும் அவரவர் வேலைகளைப்பார்த்துக்கொண்டு நிம்மதியாக வாழ உரிமையுண்டு எனும் போது, அந்த அடிப்படை உரிமையை இது போன்ற சமூக ஊடகங்கள் தங்கள் லாபத்திற்காக பறித்துக்கொள்வதை அனுமதிக்கக் கூடாது.

இனிமேலும் பொய்களைக் கூறி, கீழ்தரமாக விமர்சித்து தங்கள் எல்லையைக் கடக்கும் நபர்கள் சுய பரிசோதனை செய்து தங்களைத் திருத்திக்கொள்ளவில்லை என்றால் சட்டப்படியாக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, எனது கோரிக்கைகளைக் குறிப்பிட்டு மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் எல் முருகன் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். கடிதத்தின் நகலை மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர், திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கும் அனுப்பி வைக்க இருக்கிறேன். அனாவசியமாக தனிநபர் தாக்குதலில் ஈடுபடும் சமூக ஊடகங்கள் மீதும், சம்பந்தப்பட்ட நபர்கள் மீதும் தேவையான நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறேன் என்று கூறியுள்ளார்.

# என்ஜினீயர் வீட்டில் 103 பவுன் நகை கொள்ளை



பூந்தமல்லி, ஜூலை 31

சென்னை புறநகர் பகுதியை குறி வைத்து மர்ம கும்பல் கைவரிசை காட்டி வருகிறது. தனியாக இருக்கும் பெண்கள் மற்றும் வீடுகளில் புகுந்து நகை பணத்தை கொள்ளையடித்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக திருவேற்காடு பகுதியில் என்ஜினீயர் ஒருவர் வீட்டில் முகமூடி கும்பல் 103 பவுன் நகையை கொள்ளையடித்து கைவரிசை காட்டி உள்ளது பொது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதன் விவரம் வருமாறு:

திருவேற்காடு அருகே உள்ள அயனம்பாக்கம், ஈ.ஜி.பி. நகரை சேர்ந்தவர் ஜனார்த்தனன். என்ஜினியரான இவர் சவுதி அரேபியாவில் உள்ள கட்டுமான நிறுவனம் ஒன்றில் மேலாளராக வேலைபார்த்து வருகிறார். இவரது மனைவி கோகிலா. இவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.

வெளிநாட்டில் ஜனார்த்தனன் வேலை பார்த்து வந்த நிலையில் அயனம்பாக்கத்தில் உள்ள வீட்டில் அவரது மனைவி மகளுடன் வசித்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த மாதம் ஜனார்த்தனன் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தார். நேற்று மாலை 6 மணியளவில் அவர் வீட்டை பூட்டிவிட்டு குடும்பத்துடன் அண்ணா நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்துக்கு சென்றார்.

பின்னர் அவர்கள் இரவு 11 மணிக்கு வீட்டிற்கு திரும்பி வந்தனர். அப்போது வீட்டின் கதவு பூட்டு திறந்து கிடந்தது. உள்ளே சென்று பார்த்த போது பீரோ அதில் இருந்த 103 பவுன் நகை, ரூ.50 ஆயிரம் ரொக்கம் மற்றும் வெள்ளிப்பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் திருவேற்காடு போலீசார் விரைந்து வந்து கொள்ளை குறித்து விசாரணை நடத்தினர். தடயவியல் நிபுணர்களும் வந்து கொள்ளை நடந்த வீட்டில் பதிவாகி இருந்த கை ரேகைகளை பதிவு செய்தனர்.

அங்கு பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமராவில் கொள்ளையனின் உருவம் பதிவாகி உள்ளது. அதனை வைத்து கொள்ளையர்களை பிடிக்க போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். ஜனார்த்தனன் வீட்டில் இருந்து வெளியே செல்லும் நேரத்தை நோட்டமிட்டு மர்ம நபர்கள் கைவரிசை காட்டி உள்ளனர். என்ஜினீயர் ஜனார்த்தனன் கடந்த 10 ஆண்டுகளாக சவுதிஅரேபியாவில் வேலை பார்த்து வருகிறார். இவரது சொந்த ஊர் கும்பகோணம் ஆகும். கடந்த சில ஆண்டுகளாக கும்மிடிப்பூண்டியில் தங்கியிருந்தார்.

தற்போது மகளின் படிப்புக்காக கடந்த 3 மாதத்திற்கு முன்புதான் அயனம்பாக்கம் பகுதிக்கு வாடகைக்கு குடி வந்துள்ளார். அவர் இருந்த வீட்டின் மேல் பகுதியில் வேறொருவர் வாடகைக்கு வசித்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று மாலை வீட்டை பூட்டி விட்டு வெளியே சென்ற போது தான் மர்ம கும்பல் கைவரிசை காட்டியுள்ளனர். அந்த பகுதியில் வீடுகள் நெருக்கமாக இல்லை. இதனால் கொள்ளையர்கள் வந்து சென்றது அப்பகுதியில் வசிப்பவர்களுக்கு தெரியவில்லை.

கொள்ளை நடந்த வீட்டில் உள்ள கண்காணிப்பு கேமராவில் முகமூடி அணிந்த வாலிபர் ஒருவர் கள்ளச்சாவி போட்டு வீட்டை திறந்து செல்வது பதிவாகி உள்ளது.

இரவு 7.45 மணிக்கு வீட்டுக்குள் செல்லும் கொள்ளையன் 8.15 மணிக்கு நகை பணத்துடன் வெளியே செல்கிறான். அவனுடன் கூட்டாளிகள் மேலும் சிலரும் வந்திருக்கலாம். அவர்கள் வீட்டின் வெளி பகுதியில் நோட்மிட்டு காத்திருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

முகமூடி கொள்ளையர்களை பிடிக்க போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இது தொடர்பாக பழைய குற்றவாளிகளின் பட்டியலை போலீசார் சேகரித்து வருகின்றனர்.

என்ஜினீயர் வீட்டில் 103 பவுன் கொள்ளை போன சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நண்பன் கொலைக்கு பழிக்கு பழி வாலிபர் பரபரப்பு




கரூர் ஜூலை 31

கரூர் தெற்கு காந்திகிராமம் அருகே உள்ள கம்பன் தெருவில் வசித்து வந்தவர் செந்தில் குமார். இவரது மகன் ஜீவா (வயது 20). திருப்பூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்.

கடந்த வாரம் சொந்த ஊருக்கு விடுமுறையில் வந்த அவர் கடந்த 22ந் தேதி திடீரென மாயமானார்.

இது குறித்து அவரது தாய் சுந்தரவல்லி, தான்தோன்றி மலை போலீசாரிடம் புகார் தெரிவித்தார்.

அதன் பிறகு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் காந்திகிராமம் அருகே உள்ள இ.பி. காலனி பகுதியை சேர்ந்த சசிக்குமாருக்கும் மாயமான வாலிபருக்கும் இடையே முன்விரோதம் இருந்தது தெரிய வந்தது.

பின்னர் நடத்தப்பட்ட புலன் விசாரணையில் சசிகுமார் உள்ளிட்ட 10 பேர் சேர்ந்து ஜீவாவுக்கு மது வாங்கி கொடுத்து, கரூர் அருகில் உள்ள தொழிற்பேட்டை சிட்கோ பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் அவரை கொலை செய்து புதைத்தது தெரிய வந்தது.

பின்னர், கரூர் துணை போலீஸ் சூப்பிரண்டு செல்வராஜ் மற்றும் தாசில்தார் முன்னிலையில் ஜீவாவின் உடலை தோண்டி எடுத்தனர். அப்போது அவரது உடல் 7 துண்டுகளாக வெட்டி புதைக்கப்பட்டிருந்தது என்ற அதிர்ச்சி தகவல் வெளியானது.

பின்னர், போலீசார் முக்கிய குற்றவாளியான சசிகுமார் மற்றும் அவரது நண்பர்களாகர்கள் உள்பட 8 பேரை கைது செய்தனர். மேலும் இரண்டு பேரை வலை வீசி தேடுகின்றனர்.

கைதான சசிகுமார் போலீசாரிடம் பரபரப்பு வாக்கு மூலம் அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;

கரூர், பசுபதிபாளையத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் என்பவரின் நெருங்கிய நண்பன் நான். அவருடன் ஜீவாவுக்கும் பழக்கம் இருந்தது. பல குற்ற வழக்குகளில் தொடர்புடைய மோகன் ராஜை கடந்த 2021ம் ஆண்டு கொலை செய்துவிட்டனர்.

அதன் பிறகு நண்பர்களிடம் விசாரித்த போது ஜீவா அவருக்கு மதுவில் விஷம் கலந்து கொடுத்து கொலை செய்துவிட்டதாக கூறப்படுகிறது. என் நெருங்கிய நண்பரை கொன்று விட்டதால் அவர் மீது கோபம் ஏற்பட்டது.

இந்த நிலையில் ஜீவா எனது தலையை சிதைத்து விடுவேன் என இன்ஸ்டா கிராமில் பதிவிட்டார். இதைப் பார்த்ததும் எனக்கு அவன் மீது தீராத ஆத்திரம் ஏற்பட்டது.

மேலும் கொலை செய்யப்பட்ட மோகன்ராஜ் அவ்வப்போது கனவில் வந்து, என்னை கொலை செய்த ஜீவாவை இதுவரைக்கும் ஏன் விட்டு வைத்திருக்கிறாய் என்றும், அவரைப் பழி தீர்க்க வேண்டும் என்றும் கூறியதாக சொன்னார். இதனால் அவனை தீர்த்து கட்ட தக்க தருணம் பார்த்து காத்திருந்தோம்.

கடந்த வாரம் விடுமுறையில் வந்த ஜீவாவை நண்பர்கள் மூலமாக மது அருந்த அழைத்து திட்டமிட்டபடி வெட்டி கொலை செய்து உடலை துண்டு துண்டாக வெட்டி புதைத்தோம் என தெரிவித்துள்ளார். இதனிடையே, இதன் பின்னணியில் வேறு யாரும் உள்ளார்களா என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 50வது முறையாக நீட்டிப்பு



சென்னை, ஜூலை 31

தமிழ்நாடு போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாக பண மோசடி விவகாரம் தொடர்பாக அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த ஆண்டு ஜூன் 14ம் தேதி கைது செய்யப்பட்டார். ஓராண்டுக்கும் மேலாக புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

இதனையடுத்து நேற்று நடத்தப்பட்ட விசாரணையின்போது நீதிபதிகள், 'கைப்பற்றப்பட்ட பென்டிரைவ் தடயவியல் ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையும், அதில் பணமோசடி புகார் தொடர்புடைய கோப்பு இருந்ததையும் அமலாக்கத்துறை நிரூபிக்க வேண்டும்' என தெரிவித்து விசாரணையை தள்ளி வைத்தனர்.

இந்நிலையில் இன்று காணொலி மூலம் சென்னை முதன்மை அமர்வு முன்பு ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் வழக்கை விசாரணை செய்தனர்.

விசாரணையில் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை நாளை வரை நீட்டித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

# அரசு பஸ்கள் தனியார் மயமாக்கப்படாது அமைச்சர் சிவசங்கர்



கடலூர், ஜூலை 31

போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கடலூரில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கடலூர் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடர்பாக நேரில் ஆஜரானேன். இன்று எங்களுக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வாய்தா ஆகஸ்டு 3ந்தேதி நடைபெற உள்ளது.

போக்குவரத்து துறை எக்காரணத்தைக் கொண்டும் தனியார்மயமாக்கபடாது. ஏனென்றால் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் தற்போது 7200 புதிய அரசு பஸ்கள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இதில் முதற்கட்டமாக ஆயிரம் புதிய பஸ்கள் வாங்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டங்களாக பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் தனியார் மயமாக்க மாற்ற எண்ணினால் குறைந்த காலத்தில் அனைத்துபஸ்களும்வாங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும். கடந்த சில மாதங்களுக்கு முன்பு டிரைவர், கண்டக்டர் பணிக்கு 685 பேர் பணிக்கு எடுத்து அவர்கள்பணியில்சேர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

மேலும் மற்ற போக்குவரத்து பணிமனைக்கும் பணியாளர்கள் தேர்வு செய்யும் பணி தொடங்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் தமிழக முதலமைச்சர் தலைமையில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருகிறது.

அரசியல் காரணங்களுக்காக ஏதேனும் ஒரு புகார் தெரிவிக்க வேண்டும் என்பதால் அரசியல் கட்சியினர் புகார் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த அ.தி.மு.க.ஆட்சி காலத்தில் அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் காலம் 58 வயதில் இருந்து 60 வயதாக உயர்த்தி விட்டனர். ஏனென்றால் ஓய்வு காலத்தில் சரியான முறையில் அவர்களுக்கு சேர வேண்டிய பண பலன்கள் உள்ளிட்ட எந்த ஒரு பலன்களும் அவர்களுக்கு வழங்க முடியாத நிலையில் அ.தி.மு.க. அரசு செயல்பட்டு இருந்தது.

கடந்த மே மாதம் அதிகளவில் போக்குவரத்து துறையில் ஊழியர்கள் ஓய்வு பெற்று உள்ளனர். இதனை சமாளிக்கும் விதமாக இடைக்கால நிவாரணமாக ஒப்பந்த அடிப்படையில் டிரைவர் மற்றும் கண்டக்டர் நியமிக்கப்பட்டனர்.

இதன்காரணமாககடந்த கோடைகாலத்தில் வழக்கத்தை விட அதிக அளவில் பஸ்கள் இயக்கப்பட்டு அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்கு அதிக அளவில் மக்கள் சென்று வருவதால், தற்போது பஸ்கள் இயக்கம் அதிகரித்து வருகின்றது.

மேலும் சென்னை நகர் பகுதி மற்றும் புறநகர் பகுதி தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருவதால் அந்தந்த பகுதிகளுக்கு தேவையானபஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றது.

இது மட்டுமின்றி தற்போது மின்சார ரெயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் சிறப்பு பஸ்கள் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றது.

மேலும் விழுப்புரம் கோட்டத்தில் இருந்து செல்லக்கூடிய பஸ்கள் தாம்பரம் வரை செல்லாமல் தற்போது கூடுதலாக பல்லாவரம் வரை இயக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

போக்குவரத்து துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வரும் நிலையில் , கடந்த ஒரு மாதத்திற்கு முன்புடி.டி.வி. தினகரன் போக்குவரத்து துறை தனியார் மயமாக்கப்படுகின்றது என தெரிவித்து இருந்தார்.

அதனை பார்த்த எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தானும் சொல்லாமல் இருக்க கூடாது என்ற நோக்கில் போக்குவரத்து துறை தனியார்மயமாக்க பட முயற்சி செய்கின்றனர் என தெரிவித்து உள்ளார்.

டி.டி.வி.தினகரன் அரசு தொடர்பாக என்ன நடைபெறும் என தெரியாமல் பேசி உள்ளார். ஆனால் எடப்பாடி பழனிச்சாமி முதல் அமைச்சராக இருந்து உள்ள நிலையில் கடந்த ஆட்சி காலத்தில் ஒரு ஓட்டுனர், நடத்துனர் புதிதாக பணிக்கு எடுக்கவில்லை.

ஆனால் தற்போதைய திமுக ஆட்சிக்காலத்தில் 685 அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் பணியாளர்கள் எடுக்கப்பட்டு உள்ளோம். ஆகையால் எடப்பாடி பழனிச்சாமி அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இது போன்று பேசி வருகிறார்.

மேலும் இந்த அறிக்கைகள் வந்து ஒரு மாதம் கழித்து தூங்கி எழுந்து பேசுவது போல் சீமான் போக்குவரத்து துறை தனியார் மயமாக்கப்படுகின்றது என தெரிவித்துள்ளார்.

அவருக்கு தெரிந்தது இலங்கை மற்றும் ஈழத்தில் நடக்கும் பிரச்சனை மட்டுமே. தமிழகத்தில் நடக்கும் பிரச்சனைகள் குறித்து பேச வேண்டுமானால் அதற்கு முன்பாக ஆட்சியில் என்னென்ன நடக்கின்றது என்பதனை தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

தற்போது ஒரு சில தொழிற்சங்கங்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதால் தனியார் மயமாக்கப்படுகின்றது என தொடர்ந்துகுற்றச்சாட்டை வைத்து வருகின்றனர். அதன் அடிப்படையில் சீமான் உள்ளிட்ட அரசியல்கட்சியினர்தொடர்ந்து பேசி வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பணகுடியில் தோட்டத்தில் புகுந்து 10 ஆடுகளை கடித்து கொன்ற சிறுத்தை புலி



பணகுடி, ஜூலை 31

நெல்லை மாவட்டம் பணகுடி அடுத்த ரோஸ்மியா புரத்தை சேர்ந்தவர் அரிராம். இவருக்கு சொந்தமான தோட்டம் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது. இதில் விவசாயம் பார்த்து வருவதோடு 30க்கும் மேற்பட்ட வெள்ளாடுகளை வளர்த்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று இரவு அவரது தோட்டத்தில் தனது ஆடுகளை அடைத்துவிட்டுவீட்டிற்கு தூங்க சென்றார். இன்று வழக்கம் போல அதிகாலையில் தோட்டத்திற்கு அரிராம் சென்றார்.

சிறுத்தை புலி கால் தடம்

அப்போது தோட்டத்தில் இருந்த சுமார் 10க்கும் மேற்பட்ட ஆடுகளை சிறுத்தை புலி கடித்து குதறிய நிலையில் இறந்து கிடந்தது. மேலும் 2 ஆடுகளை அது தூக்கி சென்றதும் தெரியவந்தது. இவரது தோட்டத்தில்சிறுத்தை புலியின் கால்தடம் இருந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர் இது தொடர்பாகவனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

ஆனால் வெகுநேரமாகியும் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என அரிராம் புகார்தெரிவித்து உள்ளார்.

# துப்பாக்கி சுடுதலில் பதக்கம் வென்ற வீராங்கனை மனு பாக்கருக்கு ஜி.கே.வாசன் வாழ்த்து



சென்னை, ஜூலை 31

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சுடுதலுக்கான இறுதிப்போட்டியில் மனு பாகெர் 221.7 புள்ளிகள் பெற்று 3வது இடம் பிடித்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு முதல் பதக்கமாக வெண்கலப் பதக்கம் பெற்றிருக்கும் அரியானா மாநிலத்தைச் சேர்ந்த மனு பாக்கர் தாய் நாட்டிற்கு உலக அளவில் பெருமை சேர்த்திருக்கிறார்.

இவர் ஏற்கனவே சர்வதேச அளவில் பல்வேறு பதக்கங்களை வென்றிருப்பது சிறப்புக்குரியது.

வீராங்கனையின் வெற்றிக்கு துணை நின்ற பெற்றோரையும், பயிற்சியாளரையும் பாராட்டுகிறேன்.

ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் இந்திய நாட்டிற்கு முதல் பதக்கம் வென்று கொடுத்திருக்கும் மனு பாகெர் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனைப் படைத்துமென் மேலும் வளர, வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# கரூர் அருகே ஸ்பிரே எந்திரம் வெடித்து வியாபாரி பலி: அதிகாரிகள் ஆய்வு



குளித்தலை, ஜூலை . 31

கரூர் மாவட்டம் தரகம் பட்டி அருகே கடவூர் பசும்பொன் நகர் பகுதியை சேர்ந்தவர்கிருஷ்ண மூர்த்தி(வயது49).பழைய இரும்பு வியாபாரி. நேற்று கிருஷ்ணமூர்த்தி வழக்கம் போல் கிராமங்களுக்கு சென்று பழைய பொருட்களை வாங்கிகொண்டு வீட்டிற்கு வந்து மதியம் குடும்பத்துடன் அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டார்.

பின்னர் தன் வீட்டிற்கு அருகில் உள்ள ஆஸ்பெட்டாஸ் கொட்டகைக்கு சென்று பழைய பொருட்களை தரம் பிரித்துக் கொண்டு இருந்தார்.

அப்போது விவசாய பயிருக்கு மருந்து அடிக்கும் பழைய ஸ்பிரே எந்திரத்தில் இருக்கும் பித்தளை பொருட்களை எடுப்பதற்காக அதை சம்மட்டியால் அடித்தார். இதில் எதிர்பாராத விதமாக ஸ்பிரே எந்திரம் பயங்கரமாக வெடித்து சிதறியது. இதில் கிருஷ்ண மூர்த்தி உடல் சிதறி சம்பவ இடத்திலேயே பலியானார்.

இந்த வெடி சத்தம் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு கேட்டது. சம்பவத்தின் போது கிருஷ்ண மூர்த்தியின் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சிதறின. கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்தினர் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்த போது கிருஷ்ண மூர்த்தி உடல்சிதறி இறந்து கிடந்ததை கண்டு அசிர்ச்சி அடைந்து கதறி அழுதனர்.

இதுபற்றி தகவல் கிடைத்த கரூர் மாவட்ட தீயணைப்பு நிலைய அலுவலர் வடிவேல் தலைமையிலான வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்று பழைய இரும்பு பொருட்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த குளித்தலை டி.எஸ்.பி.செந்தில்குமார், தோகை மலை இன்ஸ்பெக்டர்ரமேஷ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் போலீசார், கிருஷ்ண மூர்த்தியின் உடலைகைபற்றி கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். எந்திரம் வெடித்ததற்கான காரணம் என்ன என்பது மர்மமாக உள்ளது. காற்றழுத்தம் காரணமா? அல்லது அதில் வெடி பொருட்கள் இருந்ததா? என்றும் போலீசார் சந்தேகிக்கின்றனர். பூச்சி மருந்து அடிக்கும் இயந்திரத்தின் ஸ்ப்ரே மோட்டாரில் ஆயில் பெட்ரோல் இருந்துள்ளதாக கூறுகின்றனர். இதுகுறித்து அறிவியல் தொழில்நுட்ப அதிகாரிகளை வரவழைத்து போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

பலி யான கிருஷ்ண மூர்த்திக்கு மல்லேஸ்வரி (44) என்ற மனைவியும், ஜெயக்குமார் (22), சிவமுருகன் (12) ஆகிய 2 மகன்களும் செல்வி (17) என்ற மகளும் உள்ளனர். ஸ்பிரே எந்திரம் வெடித்து வியாபாரி பலியான சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 1.45 லட்சம் கனஅடியாக சரிவு



ஒகேனக்கல், ஜூலை 31

கர்நாடகா, கேரளா காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கன மழை பெய்து வந்ததால், கர்நாடக அணைகளான கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி ஆகிய அணைகள் அதன் முழு கொள்ளளவை எட்டியது. இதனால்அந்த அணைகளுக்கு வரும் உபரி நீரை அப்படியே காவிரி ஆற்றில் வெளியேற்றி வருகிறது.

இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் காலை இரு அணைகளில் இருந்தும் வினாடிக்கு 1 லட்சத்து 43 ஆயிரம் கனஅடி அளவில் நீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்று மாலை சற்று அதிகரித்து வினாடிக்கு 1 லட்சத்து 66 ஆயிரம் கன அடியாக தண்ணீர் இன்று 1 லட்சத்து 43 ஆயிரம் கனஅடி அளவில் நீர் திறந்து விடப்பட்டது.

கர்நாடகா அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் தமிழககர் நாடகா எல்லை பகுதியான பிலிக்குண்டுலு வழியாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு கடந்த 2 தினங்களாக தொடர்ந்து நீர்வரத்து 1 லட்சம் கனஅடிக்கு மேல் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது.

இந்த நீரானது நேற்று காலை9மணிநிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 1 லட்சத்து 55,000 கன அடியாக அதிகரித்து காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மதியம் 1 மணி நிலவரப்படி நீர்வரத்து மேலும் அதிகரித்து 1 லட்சத்து 60,000 கன அடியாக அதிகரித்தது.

இந்த நீர்வரத்தானது நேற்று மாலை வரை அதே நிலையில் நீடித்து வந்தது. இந்த நிலையில் இன்று காலை நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து சற்று சரிந்து 1 லட்சத்து 45 ஆயிரம் கன அடியாக குறைந்து வந்து கொண்டிருக்கிறது.

மேலும் கர்நாடகா அணைகளான கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளுக்கு நீர்வரத்து குறைந்ததால் தமிழகத்திற்கு திறந்து விடும் உபரி நீர் 1 லட்சத்து 43 ஆயிரம் கன அடியாக சரிந்து வருவதால் ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தும் சரிய வாய்ப்பு உள்ளது என மத்திய நீர் ஆணைய அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக பிலிக்குண்டுலு பகுதியில் தொடர்ந்து நீர்வரத்தை மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

3வது நாளாக ஒகேனக்கலில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக நாகர்கோவில், முதலை பண்ணை, பென்னாகரத்தில் உள்ள நாகமரை, ஏரியூர் ஆகிய காவிரி கரையோர மக்களுக்கு தொடர்ந்து ஒலிபெருக்கி மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றனர். மேலும் அதிகாரிகள் வெள்ளம் சூழந்துள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்டு பொதுமக்களை மக்கள் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள தனியார் திருமண மண்டபம் மற்றும் அரசு பள்ளிகளில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

ஒகேனக்கல்லில் வெள்ளப்பெருக்கு காரணமாக, சுற்றுலா தளத்தில் பரிசல் இயக்கவும் அருவிகளில் மற்றும் காவிரி ஆற்றங்கரை ஓரங்களில் குளிக்கவும் 14வது நாளாக தொடர்ந்து தடை நீடித்து வருகிறது. தீயணைப்பு வீரர்கள், போலீசார், வருவாய் துறையினர் ஆகியோர் வெள்ளத் தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# காஞ்சிபுரம் மேயர் பதவி தப்பியது: கவுன்சிலர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை



காஞ்சிபுரம், ஜூலை 31

காஞ்சிபுரம் மாநகராட்சியில் தி.மு.க.வை சேர்ந்த மகாலட்சுமி யுவராஜ் மேயராக உள்ளார்.

மாநகராட்சியில் மொத்தம் தி.மு.க.வில் 33 பேர், காங்கிரஸ்1, அ.தி.மு.க.8, த.மா.கா1, பா.ம.க.2, பா.ஜனதா1, விடுதலை சிறுத்தைகள் 1, சுயேட்சைகள்4 உறுப்பினர்கள் உள்ளனர். துணை மேயராக காங்கிரசை சேர்ந்த குமரகுருநாதன் உள்ளார்.

மேயர் மகாலட்சுமி யுவராஜிக்கு சொந்த கட்சியான தி.மு.க. கவுன்சிலர்களே எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களுடன் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து மேயருக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். மேயருக்கு எதிராக மொத்தம் 33 கவுன்சிலர்கள் இருந்தனர்.

அவர்கள், மகாலட்சுமி யுவராஜ் மேயர் பதவியில் இருந்து விலககோரி மாவட்ட கலெக்டர், மாநகராட்சி கமிஷனரிடம் புகார் மனு அளித்தனர். தி.மு.க. எதிர்ப்பு கவுன்சிலர்களை கட்சி மேலிடம் அழைத்து சமாதானம் செய்தும் அவர்கள் தங்களது முடிவில் இருந்து பின்வாங்கவில்லை.

இதைத்தொடர்ந்து மேயருக்கு எதிராக இன்று (29ந்தேதி) நம்பிக்கையில்லா தீர்மானம் மற்றும் அது தொடர்பான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று மாநகராட்சி கமிஷனர் செந்தில் முருகன் ஏற்கனவே அறிவித்து இருந்தார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் மொத்தம் உள்ள 51 கவுன்சிலர்களில் 30க்கும் மேற்பட்டோர் சொகுசு பஸ்சில் காஞ்சிபுரத்தில் இருந்து சுற்றுலா சென்றனர்.

அவர்கள் சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள ரிசார்ட்டுகளில் தங்கி இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் அவர்கள் மாநகராட்சி கூட்டத்தில் பங்கேற்பார்களா? என்ற கேள்வி எழுந்து இருந்தது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் காஞ்சிபுரம் மாநகராட்சி கூட்டம் இன்று காலை 10 மணிக்கு தொடங்கியது. மாநகராட்சி கமிஷனர் செந்தில் முருகன் சரியாக காலை 10 மணிக்கு தனது இருக்கையில் வந்து அமர்ந்தார். அவரது இருக்கை அருகில் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு வாக்களிக்க பூட்டு போடப்பட்ட பெட்டியும் தயாராக இருந்தது.

ஆனால் மாநகராட்சி கூட்டத்திற்கு கவுன்சிலர்கள் யாரும் வரவில்லை. அதிகாரிகள் மட்டும் வந்திருந்தனர். கூட்டத்தில் கவுன்சிலர்கள் யாரும் பங்கேற்காததால் வெறிச்சோடி கிடந்தது.

சிறிது நேரத்திற்கு பின்னர் அதிருப்தி தி.மு.க. கவுன்சிலரான 34வது வார்டு உறுப்பினர் பிரவீன் குமார் மாநகராட்சி கூட்டத்திற்கு வந்தார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அவர் இருக்கையில் அமராமல் நேராக கமிஷனர் செந்தில் முருகனிடம் சென்று கடிதம் ஒன்றை கொடுக்க முயன்றார். ஆனால் அதனை கமிஷனர் வாங்க மறுத்தார். மேலும் வருகை பதிவேட்டில் கையெழுத்திட்ட பின்னர் கடிதத்தை வழங்கும் படி தெரிவித்தார்.

ஆனால் கவுன்சிலர் பிரவீன்குமார் வருகை பதிவேட்டில் கையெழுத்து போட வில்லை. மேலும் அவர் தான் கொண்டு வந்த கடிதத்தை கமிஷனர் செந்தில் முருகன் இருந்த மேஜை மீது வைத்து விட்டு சென்றார். அதனை கமிஷனர் கண்டுகொள்ளவில்லை. அதனை எடுத்து பார்க்கவும் இல்லை.

மேயர் மகாலட்சுமி யுவராஜிக்கு எதிராக நம்பிக்கை இல்லாதீர்மானம்கொண்டு வந்து போர்க்கொடி தூக்கிய கவுன்சிலர்கள் மற்றும் மேயருக்கு ஆதரவான கவுன்சிலர்கள் யாரும் கூட்டத்தில் பங்கேற்காததால் தொடர்ந்து பரபரப்பான நிலை நிலவியது. மேயரும் கூட்டத்திற்கு வரவில்லை.

மேயரை பதவி நீக்கம் செய்ய 5ல் 4 பங்கு கவுன்சிலர்கள் மேயருக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். ஆனால் உறுப்பினர்கள் யாரும் கூட்டத்தில் பங்கேற்காததால் நம்பிக்கையில்லா தீர்மானம் மற்றும் அது தொடர்பான விவாதம், வாக்கெடுப்புக்கு ஏற்கப்பட வில்லை. இதனால் நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்தது. இதனால் மகாலட்சுமி யுவராஜின் மேயர் பதவி தப்பியது. கட்சியின் தலைமைக்கு கட்டுப்பட்டு மேயர் மகாலட்சுமி யுவராஜிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்த தி.மு.க. கவுன்சிலர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று தெரிகிறது.

இதனால் காஞ்சிபுரம் மாநகராட்சி முன்பு டி.எஸ்.பி.முரளி தலைமையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. இதனால் அப்பகுதி பரபரப்பாக காணப்படுகிறது.

# குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை



தென்காசி: ஜூலை 31


தென்காசி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் நேற்று காலை முதல் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக குற்றாலத்தில் உள்ள முக்கிய அருவிகளான மெயின் அருவி, பழைய குற்றாலம், ஐந்தருவி, புலிஅருவி, சிற்றருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் நேற்று மாலையில் தண்ணீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது.

ஒருகட்டத்தில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஐந்தருவியில் 5 கிளைகளும் ஒரு சேர காட்சியளிக்கும் அளவு தண்ணீர் காட்டாற்று வெள்ளம்போல் விழுந்தது. இதனால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்கு மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது.

இதனால் நேற்று விடுமுறை நாளில் குடும்பத்துடன் குளிக்க வந்த ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். அவர்கள் ஐந்தருவி, பழைய குற்றாலம், மெயினருவிகளில் வெள்ளப்பெருக்கை தூரத்தில் நின்று பார்த்து ரசித்துவிட்டு சென்றனர். தொடர்ந்து இரவு முழுவதும் மலைப் பகுதியில் மழை பெய்த வண்ணம் இருந்ததால் வெள்ளப்பெருக்கு குறைய வில்லை.

இந்நிலையில் இன்று காலையில் மலைப்பகுதியில் சாரல் மழை சற்று குறைந்துள்ளது. இதன் காரணமாக பழைய குற்றாலம் மற்றும் ஐந்தருவில் சற்று தண்ணீர் குறைய தொடங்கியுள்ளது. இருப்பினும் குளிப்பதற்கு தொடர்ந்து தடை நீட்டிக்கப் பட்டுள்ளது. அதேநேரத்தில் மெயினருவியில் ஆர்ச்சை தொட்டபடி தண்ணீர் விழுந்து வருகிறது. எனவே அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்கு இன்று 2வது நாளாக தடை நீடிக்கிறது. அருவிகளுக்கு வரும் தண்ணீரின் அளவு சீராகும் பட்சத்தில் சுற்றுலா பயணிகள் உடனடியாக குளிக்க அனுமதிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை கோவிலில் மகன்களுடன் தனுஷ் சாமி தரிசனம்



தனுஷ் இயக்கி நடித்த ராயன் படம் கடந்த 27ம் தேதி திரைக்கு வந்து ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. இந்தப்படம் தனுஷ் நடிக்கும் 50வது படமாகும். படத்தில் பிரகாஷ்ராஜ், எஸ்.ஜே.சூர்யா, காளிதாச் ஜெயராம், துசரா விஜயன், சந்திப் கிஷன் உள்பட பலர் நடித்திருந்தனர்.

இந்நிலையில்,தனுஷ்தனது41வதுபிறந்தநாளைநேற்றுகொண்டாடினார். இதையொட்டி போயஸ்கார்டனில் உள்ள அவரது வீட்டு முன்பு ஏராளமான ரசிகர்கள் திரண்டனர். இதனையடுத்து வீட்டில் இருந்து வெளியே வந்து தனுஷ் ரசிகர்களை சந்தித்தார். அவர்களுடன் செல்பி எடுத்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். இந்தநிலையில் ஆடி கிருதிகையையொட்டி திருவண்ணாமலை கோவிலில் இன்று தனுஷ் சாமி தரிசனம் செய்தார். தனுஷ் கையில் ருத்ராட்ச மாலையுடன் தரிசனம் செய்தார். பின்னர் வைகுண்ட வாசல் வழியாக வந்து மலையை பார்த்து கும்பிட்டார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது. அவரோடு இரு மகன்களும் கோவிலுக்கு வந்திருந்தனர். திருவண்ணாமலை கோவிலுக்கு தனுஷ் வந்த தகவலை தொடர்ந்து ஏராளமான ரசிகர்கள் கோவிலில் திரண்டனர்.

இந்நிலையில், இன்று தனுஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: ராயன் படத்தை மாபெரும் வெற்றியடைய செய்து மிகச்சிறந்த பிறந்தநாள் பரிசாக வழங்கி வாழ்த்து தெரிவித்த திரையுலக நண்பர்கள், எனது அன்பான ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி என அதில் பதிவிட்டுள்ளார்.

# இந்தியன் 2 படத்தின் `கதறல்ஸ் வீடியோ பாடல் வெளியீடு




தமிழகம் முழுவதும் ஜூலை 12 ம் தேதி 'இந்தியன் 2' படம் வெளியானது. சுமார் 28 வருடங்களுக்கு பிறகு சங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துள்ளார். இந்தியன் முதல் பாகம் இன்னும் பலரால் ரசிக்கப்பட்டு வருகின்ற நிலையில் 'இந்தியன் 2' பெரும் எதிர்பார்ப்புடன் வெளியாகியது.

அனிருத் இசையமைத்துள்ள இந்த படத்தின் பாடல்கள் சில நாட்களுக்கு முன் வெளியாகி இணையத்தில் வைரலாகியது. இந்த படத்தில் பாபி சிம்ஹா, சித்தார்த், சமுத்திரக்கனி, பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் பிரீத் சிங் மற்றும் பலர் நடித்துள்ளனர். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்து உள்ளது.

இதையடுத்து, 'கதறல்ஸ்' என்ற பாடல் தற்பொழுது வெளியாகி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதற்கு முன் 'இந்தியன் 2' படத்தில் இடம்பெற்றுள்ள 'கலேண்டர்' பாடல் வெளியாகி கவனம் பெற்றது..

இந்தியன் 2 படத்தின் வெற்றியை தொடர்ந்து, இந்தியன் 3 படம் இன்னும் சில மாதங்களில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# வாழை படத்தின் 2வது பாடல் வெளியானது

கடந்த 2018ம் ஆண்டு வெளியான 'பரியேறும் பெருமாள்' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் மாரி செல்வராஜ். இந்த திரைப்படம் மிகுந்த பாராட்டை பெற்றது. இதையடுத்து, தனுஷ் நடித்த 'கர்ணன்', உதயநிதி ஸ்டாலின் நடித்த 'மாமன்னன்' உள்ளிட்ட படங்களை மாரி செல்வராஜ் இயக்கினார். இதைத் தொடர்ந்து மாரி செல்வராஜ் இயக்கியுள்ள திரைப்படம் 'வாழை'. இப்படத்திற்கு தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு மேற்கொள்கிறார். மாரி செல்வராஜ் தயாரிக்கும் முதல் திரைப்படம் இதுவாகும்.

இந்த படத்தில் நடிகர் கலையரசன் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும் நிகிலா விமல், திவ்யா துரைசாமி, 'வெயில்' படம் மூலம் பிரபலமான பிரியங்கா மற்றும் சில சிறுவர்களும் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். மாரி செல்வராஜ் தற்போது துருவ் விக்ரமை வைத்து 'பைசன்' படத்தை இயக்கி வருகிறார்.

மாரி செல்வராஜின் 'வாழை' படத்திலிருந்து முதல் பாடல், கடந்த 18ஆம் தேதியன்று வெளியாகி வரவேற்பை பெற்றுள்ள நிலையில், இத்திரைப்படத்திலிருந்து இரண்டாவதாக 'ஒரு ஊருல ராஜா...' என்ற பாடல் இன்று(ஜூலை 29) மாலை வெளியாகியுள்ளது.

இத்திரைப்படத்தின் இசையமைப்பாளரான சந்தோஷ் நாரயணன் பாடியுள்ள இந்த பாடலில் இடம்பெற்றுள்ள வரிகளை இன்ஸ்டாகிராமில் படத் தயாரிப்பு நிறுவனம் பகிர்ந்துள்ளது. 'காக்கா கத கேக்கும்போது யானை மூஞ்சு தெரியுதுயானைக் கத கேக்கும்போது பூனை சத்தம் கேக்குதுபூனைக் கத கேக்கும்போது தெருநாய் கொறைக்குது..' என குழந்தைகளை வெகுவாகக் கவரும் வரிகளை எழுதி பாடலாக வெளியிட்டுள்ளார் இயக்குநர் மாரி செல்வ ராஜ்.

சிறார்களை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் ஆகஸ்ட் மாதம் 23ம் தேதி வெளியாகவுள்ளது.

# பிரபாஸ் நடிக்கும் 'தி ராஜா சாப்' படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியானது




தெலுங்கு திரை உலகில் முன்னணி நடிகராக இருந்துவந்த பிரபாஸ், பாகுபலி படத்தின் மூலம் இந்தியா முழுவதும் பிரபலமானார். அதனைத்தொடர்ந்து இவர் நடிக்கும் அனைத்து திரைப்படங்களும் இந்திய அளவில் வெளியாகின்றன. சமீபத்தில், பிரபாஸ் நடிப்பில் நாக் அஸ்வின் இயக்கத்தில் உருவாகிய 'கல்கி 2898 ஏ.டி' திரைப்படம் ரூ.1,000 கோடிக்கும் மேல் கடந்து வசூல் சாதனை செய்தது.

இதற்கு அடுத்ததாக, மாருதி இயக்கத்தில் ஹாரர் காமெடி கதைக்களத்தில் உருவாகும் 'தி ராஜா சாப்' படத்தில் நடிக்க பிரபாஸ் ஒப்பந்தமாகி இருக்கிறார். தமன் இசையமைக்கும் இப்படத்தில் பிரபாசுடன், மாளவிகா மோகனன், நிதி அகர்வால், ரித்தி குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், பிரபாசின் அடுத்த படத்தில் கதாநாயகியாக பாகிஸ்தான் நடிகை சஜல் அலி நடிக்க உள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன. ஆனால் இதுகுறித்த அதிகாரப்பூர்வ தகவல் இதுவரை வெளியாகவில்லை.

பீப்பிள் மீடியா பேக்டரி மற்றும் ஜிஎஸ்கே மீடியா ஆகிய தயாரிப்பு நிறுவனங்கள் இணைந்து இந்த படத்தினை தயாரிக்கிறது.

தற்போது 'தி ராஜா சாப்' படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியாகியுள்ளது. மேலும், 2025ம் ஆண்டு ஏப்ரல் 10ம் தேதி இப்படம் வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் 'எ கொயட் பிளேஸ்: டே ஒன்'?



'எ கொயட் பிளேஸ்: டே ஒன்' என்பது மைக்கேல் சர்னோஸ்கி எழுதி இயக்கிய ஹாலிவுட் திகில் திரைப்படமாகும். இப்படம் நடிகர் மற்றும் இயக்குனரான ஜான் கிராசின்ஸ்கியின் 2018ல் வெளியான 'எ கொயட் பிளேஸ்' மற்றும் 2021ல் வெளியான 'எ கொயட் பிளேஸ்: பார்ட் II' ஆகிய படங்களுக்கு முன்பு அமைந்த கதையாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப்படத்தில் ஜோசப் குவின், அலெக்ஸ் வோல்ப், லூபிடா நியோங்கோ மற்றும் அலெக்சாண்டர் ஜான் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படம், வேற்றுகிரக வாசிகளின் தாக்குதலிலிருந்து மக்கள் எவ்வாறு உயிர் பிழைக்கிறார்கள் என்ற கதையாகும்.

இந்தபடம் கடந்த மாதம் 28ந் தேதி திரையரங்குகளில் வெளியானது. ரசிகர்களின் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற இப்படம் உலக அளவில் $245.9 மில்லியனுக்கும் மேல் வசூல் செய்து சாதனை படைத்தது. தற்போது இந்த படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 'எ கொயட் பிளேஸ்: டே ஒன்' படம் நாளை ஓ.டி.டி. தளத்தில் வெளியாக உள்ளதாக தெரிகிறது. ஆனால், படக்குழு இதனை உறுதிப்படுத்தவில்லை.

# 'நான் நன்றாக இருக்கிறேன்' உடல்நலம் குறித்து பதிவிட்ட சங்கீத் பிரதாப்

மேத்யூ தாமஸ், அர்ஜுன் அசோகன், சங்கீத் பிரதாப் நடிப்பில் உருவாகி வரும் மலையாள படம் 'புரோமான்ஸ்'. இந்தப் படத்தை அர்ஜுன் டி.ஜோஸ் இயக்குகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு கொச்சியில் நடைபெற்றது. நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி அளவில் கொச்சியின் எம்.ஜி.சாலையில் கார் ஓட்டும் காட்சி ஒன்று படமாக்கப்பட்டது.

அப்போது அந்த கார் விபத்தில் சிக்கியது. விபத்தின்போது காரின் முன்பக்கம் நடிகர் அர்ஜுன் அசோகனும், பின்பக்கம் சங்கீத் பிரதாப்பும் இருந்தனர். இதில் அர்ஜுன் அசோகன் மற்றும் சங்கீத் பிரதாப்புக்கு காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து, படப்பிடிப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் நடிகர் சங்கீத் பிரதாப், நலமாக இருப்பதாக இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில்,

'நாங்கள் ஒரு விபத்தை சந்தித்தோம். அதிர்ஷ்டவசமாக அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறோம். சில மணி நேரமாக நான் கண்காணிப்பில் இருந்தேன், விரைவில் மருத்துவமனையிலிருந்து திரும்புவேன். எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி. எனக்கு ஒரு சிறிய காயம் உள்ளது. ஆனால் இப்போது நான் நன்றாக உணர்கிறேன்.

அனைத்து அன்புக்கும் அக்கறைகளுக்கும் நன்றி. உங்கள் அழைப்புகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாமல் போனதற்கு வருந்துகிறேன். நான் இப்போது பாதுகாப்பாக இருக்கிறேன், முழுமையாக குணமடைய சில நாட்கள் ஓய்வு தேவை. 'புரோமான்ஸ்' படப்பிடிப்பு சில நாட்களில் தொடரும், விரைவில் திரையரங்குகளில் சந்திப்போம்', இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஒருநாள் தொடரில் பங்கேற்க இலங்கை சென்றடைந்த விராட் ரோகித்



இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இரு டி20 ஆட்டங்களின் முடிவில் இந்தியா 20 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி நாளை நடைபெறுகிறது.

இதையடுத்துஇருஅணிகளுக்கும்இடையிலான ஒருநாள் தொடர் ஆகஸ்ட் 2ம் தேதி முதல் 7ம் தேதி வரை நடைபெறுகிறது. ஒருநாள் தொடரில் ரோகித்தலைமையிலானஇந்தியஅணிகளமிறங்க உள்ளது. இந்நிலையில் ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா மற்றும் நட்சத்திர ஆட்டக்காரர் விராட் கோலி ஆகியோர் இன்று இலங்கை சென்றடைந்துள்ளனர்.

மேலும் ஸ்ரேயாஸ் ஐயர், கே.எல்.ராகுல், குல்தீப் யாதவ், ஹர்ஷித் ராணா ஆகியோரும் இலங்கை சென்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இவர்கள் அனைவரும் அபிஷேக் நாயர் தலைமையில் பயிற்சியில் ஈடுபட உள்ளதாக கூறப்படுகிறது.

ஒருநாள் தொடருக்கான அட்டவணை விவரம்:

முதல் ஒருநாள் போட்டி ஆகஸ்ட் 02

2வது ஒருநாள் போட்டி ஆகஸ்ட் 04

3வது ஒருநாள் போட்டி ஆகஸ்ட் 07

# விராட் கோலியின் இடத்தை யாரால் நிரப்ப முடியும்? ராபின் உத்தப்பா பதில்



2024 டி20 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. சாம்பியன்பட்டம்வென்றதும் விராட் கோலி, ரோகித் சர்மா, ரவீந்திர ஜடேஜா ஆகிய சீனியர் வீரர்கள் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். இதைத் தொடர்ந்து டி20 அணியில் அவர்களுடைய இடத்தை நிரப்பப்போவது யார் என்று எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

இந்நிலையில் 3 வகையான கிரிக்கெட்டில் அபாரமாக விளையாடும் விராட் கோலியின் இடத்தை யாரால் நிரப்ப முடியும்? என்ற கேள்விக்கு இந்திய முன்னாள் வீரர் ராபின் உத்தப்பா தனது பதிலை கூறியுள்ளார்.

விராட் கோலியின் இடத்தை வருங்காலங்கில் நிரப்பும் திறமையை ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் சுப்மன் கில் கொண்டிருப்பதாகவும், எனவே அந்த இருவருக்கும் இந்திய அணி சமமான வாய்ப்பு வழங்க வேண்டும் என்று ராபின் உத்தப்பா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது , விராட் கோலியின் இடத்தை அந்த இருவராலும் (சுப்மன் கில் மற்றும் ருதுராஜ் கெய்க்வாட்) ஏன் நிரப்ப முடியாது?. இருவருமே நல்ல வீரர்கள். டி20 கிரிக்கெட்டில் அவர்கள் எந்தளவுக்குதரமானவர்கள்என்பதைஅவர்களின்புள்ளிவிவரங்கள்பேசுகின்றன. இருப்பினும் தொடர்ச்சியாக செயல்படக்கூடியவர் என்ற அடிப்படையில் பார்க்கும் போது ருதுராஜ் புள்ளிவிவரங்கள் கொஞ்சம் நன்றாக இருக்கிறது.

ஆனால் சுப்மன் கில் அதிரடியான பவர் மற்றும் டச் ஆகியவற்றை பெறுவதற்கான பன்முகத் தன்மையை கொண்டுள்ளார். எனவே அந்த இருவரில் ஒருவரை தேர்ந்தெடுப்பது மிகவும் கடினம். எனவே அவர்கள் இருவரையும் இந்திய அணி தேர்ந்தெடுத்து விளையாட வேண்டும் என்று நான் கேட்பேன். ஏனெனில் அந்த இருவருமே 3 வகையான கிரிக்கெட்டிலும் விளையாடக்கூடிய வீரர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# பாரீஸ் ஒலிம்பிக்; பேட்மிண்டனில் காலிறுதிக்குள் நுழைந்து இந்திய ஜோடி வரலாற்று சாதனை




பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் குரூப்சி பிரிவில் இந்தியாவை சேர்ந்த சாத்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஜோடி, பிரான்ஸ் நாட்டை சேர்ந்த லூகாஸ் கார்வீ மற்றும் ரோனன் லபார் ஜோடியை எதிர்த்து விளையாடியது. 46 நிமிடங்கள் நீடித்த இந்த போட்டியில் 21-17, 21-14 என்ற செட் கணக்கில் இந்திய ஜோடி வெற்றி பெற்றுள்ளது. உள்நாட்டில் போட்டி நடந்த நிலையில், மக்கள் பிரான்ஸ் ஜோடிக்கு ஆதரவை வழங்கி உற்சாகப்படுத்தி கொண்டே இருந்தனர். எனினும், இந்திய ஜோடி இதனையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் அதிரடியாக விளையாடி நேர் செட் கணக்கில் பிரான்ஸ் ஜோடியை வீழ்த்தி வெற்றி பெற்றது. காலிறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக பேட்மிண்டன் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடி காலிறுதிக்குள் நுழைந்து சாதனை படைத்து உள்ளது. இந்த பிரிவில், ஜெர்மனியின் மார்வின் சீடல் மற்றும் மார்க் லாம்ஸ்பஸ் ஜோடியை எதிர்த்து 2வது போட்டியில் இந்திய ஜோடி விளையாட இருந்தது. எனினும், மூட்டில் ஏற்பட்ட காயத்தினால் மார்க் விளையாடவில்லை. இதனால், 2வது போட்டி ரத்து செய்யப்பட்டு உள்ளது.

இதனை தொடர்ந்து, 3வது போட்டியில் இந்திய ஜோடி வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. நாளை நடைபெற உள்ள போட்டியில், இந்தோனேசியாவை சேர்ந்த பஜார் ஆல்பியான் மற்றும் முகமது ரியான் ஆர்தியாந்தோ ஜோடியை எதிர்த்து விளையாட உள்ளது. பதக்கம் வெல்பவர்களின் வரிசையில் இந்த இந்திய ஜோடி வலிமையாக உள்ளது.



# பாரீஸ் ஒலிம்பிக்; பேட்மிண்டனில் காலிறுதிக்குள் நுழைந்து இந்திய ஜோடி வரலாற்று சாதனை

இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 தொடர் நடை பெற்று வருகிறது. இதில் இரு டி20 ஆட்டங்களின் முடிவில் இந்தியா 20 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி நாளை நடைபெறுகிறது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் ஆகஸ்ட் 2ம் தேதி முதல் 7ம் தேதி வரை நடைபெறுகிறது. இலங்கைக்கு எதிரான தொடரை அடுத்து இந்திய அணி வங்காளதேசத்திற்கு எதிராக 2 டெஸ்ட் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் இந்திய மண்ணில் நடைபெறுகிறது. தற்போது இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து பீல்டிங் பயிற்சியாளராக டி திலீப்பும், உதவி பயிற்சியாளர்களாக அபிஷேக் நாயர் மற்றும் ரியான் டென் டோஸ்கேட்டும் செயல்பட்டு வருகின்றனர். இந்திய அணிக்கு தற்போது வரை பந்துவீச்சு பயிற்சியாளர் நியமிக்கப்படவில்லை. இலங்கைக்கு எதிரான தொடருக்காக இந்தியாவின் பந்துவீச்சு பயிற்சியாளராக சாய்ராஜ் பஹுதுலே தற்காலிகமாக செயல்பட்டு வருகிறார். இந்நிலையில் எதிர்வரும் வங்காளதேசத்திற்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது இந்தியாவின் பந்துவீச்சு பயிற்சியாளராக தென் ஆப்பிரிக்க முன்னாள் வீரரான மோர்னே மோர்கல் நியமிக்கபட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.பி.எல் தொடரில் லக்னோ அணியின் ஆலோசகராக கம்பீர் செயல்பட்ட போது மோர்னே மோர்கல் அந்த அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**

**குலனுடையான் கண்ணே யுள**

**விளக்கம்:**

**யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடி பிறப்பு உடையவனிடம் உண்டு.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.